FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | நாடகமும் அரங்கியலும் - II | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 11) 2 | 21) 3 | 31) 2 |
| 2) 4 | 12) 4 | 22) 4 | 32) 4 |
| 3) 1 | 13) 5 | 23) 3 | 33) 2 |
| 4) 2 | 14) 1 | 24) 5 | 34) 1 |
| 5) 2 | 15) 2 | 25) 5 | 35) 5 |
| 6) 1 | 16) 1 | 26) 4 | 36) 3 |
| 7) 1 | 17) 4 | 27) 1 | 37) 2 |
| 8) 3 | 18) 5 | 28) 2 | 38) 5 |
| 9) 4 | 19) 2 | 29) 3 | 39) 1 |
| 10) 5 | 20) 5 | 30) 3 | 40) 3 |

### பகுதி - II

***01.***

**I.** கதைகளின் திருப்புமுனையான சம்பவங்கள் இனங்காணப்பட்டு எழுதப்பட்டிருக்க வேண்டும்.
உதாரணமாக:- இடிப்பஸ் மன்னன் நாடகத்தில்
I கிரையோன் கூறுகின்ற தீர்க்கதரிசியின் கருத்து
II இடையனை இடிப்பஸ்சந்திப்பது *(06 புள்ளிகள்)*

agaram.lk

**II.** முதற் கேள்வியில் மாணவன் கூறும் சம்பவமானது அவல முடிவை நோக்கி நாடகத்தினை நகர்த்தியமை விபரிக்கப்பட வேண்டும்.
உதாரணமாக:- கிரையோன் கூறும் தீர்க்கதரிசிகளின் கருத்துடன் இடிப்பஸ், கிரையோனுடன் முரண்படுதல், முன்னைய மன்னனிற்கு நடந்த முடிவை ஆராய முற்படுதல், அவலத்தினை நோக்கி வந்தமையை குறிப்பிடலாம். *(09 புள்ளிகள்)*

***02.*** இரண்டு நாடகங்களினதும் வழங்கப்பட்ட விடயங்களை ஒற்றுமை சார்ந்தோ, வேறுபாடு சார்ந்தோ ஒப்பிடுகை செய்யப்பட்டிருக்கலாம்.
உதாரணமாக:- கோடை நாடகமானது அந்நியர் ஆட்சியினால் தமிழ் கலைபண்பாடு என்பவற்றில் ஏற்படும் வெறுமையே கதைக்கருவாக உள்ளது. அதே நேரத்தில் இராவணேசனில் அந்நிய அதிகாரத்துக்கு எதிராக தன்மானத்துடன் தோல்வி ஏற்படும் என்று அறிந்தும் போரிடும் இராவணனின் தேசிய உணர்வை வெளிப்படுத்துகின்றது. இரண்டும் தமிழ் தேசிய உணர்வை வெளிப்படுத்துகின்றன.

*மூன்று விடயங்களுக்கு 05 புள்ளிகள் வீதம் 15 புள்ளிகள் வழங்குக.*

**03.**

I. வழங்கப்பெற்ற அரங்க கொள்நெறிகள் உருவான சூழலும் அவற்றின் அடிப்படை பண்புகளும் விபரிக்கப்பட வேண்டும்.

உதாரணமாக :- யதார்த்த வாத அரங்கின் தோற்றத்துக்கான காரணங்கள்

- கைத்தொழில் புரட்சி – நெப்போலியனின் வீழ்ச்சி – குழந்தை தொழி சமூக ஏற்றத்தாழ்வு, புலநெறிவாதக் கொள்கை என பலவும் இணைந்து வாழ்வில் உள்ளலாளர் உள்ளவாறு நோக்கும் சிந்தனைக்கு ஐரோப்பியரை கொண்டு வந்தது அதன் விளைவே – யார்த்தவாத அரங்கு
- யதார்த்த அரங்கின் பண்புகள் - வாழ்வை மிக ஒத்திருத்தல், உள்ளதை உள்ளவாறு நோக்குதல், உரையாடல்களுக்கு முக்கியத்துவம் - நாயகன் குறைபாடுகளுடன் சித்திரிக்கப்டுதல். (3 x 5 = 15 புள்ளிகள்)

**04.**

I. கூத்தினை அடையாளப்படுத்தும் அதன் கூறுகளை இனங்கண்டு விளக்கி இருத்தல்

உதாரணமாக :-

- எடுத்துரைக்கும் பண்பு
- பாடல் ஆடல் முதன்மை பெறுதல்
- பாத்திரம் தன்மைதாமே அறிமுகம் செய்தல்
- கட்டியகான் / சபையோர் கதையை நகர்த்துவது
- பார்ப்போர் பங்கு கொள்ளல்
- புராண இதிகாச கதைப் பொருள்
- மோடியுற்ற வேட உடை ஒப்பனை …….. *(06 புள்ளிகள்)*

**05.** ஈழத்து தமிழ் அரங்க வளர்ச்சியில் பங்களிப்பு நல்கிய ஏதாவது மூன்று நிறுவனங்களின் பங்களிப்பு விபரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- நடிகர் ஒன்றியம் / திருமறைக்கலாமன்றம் / நாடக அரங்க கல்லூரி / அவைக்காற்றுகைக் கலைக்கழகம் / அரங்க செயற்பாட்டுக் குழு / செயற்திறன் அரங்க இயக்கம் / அரங்க ஆய்வு கூடம் ……………….. *(15 புள்ளிகள்)*

agaram.lk

**06.** சிறுகுறிப்புக்களில்

- குறிப்பிடப்படும் நாடகம் பற்றிய விளக்கம்
- அதன் கருத்து நிலைகள்
- வரலாற்று விளக்கம்
- உதாரணங்கள்
- அரங்கியல் பண்புகள் போன்றவை சுருக்கமாக இடம் பெற்றிருக்கலாம்

(3 x 5 = 15 புள்ளிகள்)

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

FWC

| தரம் :- 13 (2019) | நாடகமும் அரங்கியலும் - I | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 11) 3 | 21) 1 | 31) 3 |
| 2) 3 | 12) 3 | 22) 3 | 32) 1 |
| 3) 1 | 13) 2 | 23) 1 | 33) 4 |
| 4) 3 | 14) 4 | 24) 5 | 34) 4 |
| 5) 2 | 15) 5 | 25) 3 | 35) 3 |
| 6) 4 | 16) 4 | 26) 3 | 36) 3 |
| 7) 2 | 17) 3 | 27) 2 | 37) 5 |
| 8) 5 | 18) 2 | 28) 4 | 38) 3 |
| 9) 4 | 19) 1 | 29) 4 | 39) 2 |
| 10) 1 | 20) 4 | 30) 5 | 40) 3 |

### பகுதி - II

#### பிரிவு - A

01\. 1. 'கலை' என்பது 'மனிதத் திறனின் வெளிப்பாடு' என்பதனை விளக்கி இருத்தல். உதாரணத்திற்கு இரு சிந்தனையாளர்களின் கோட்பாடுகளை முன்வைத்திருத்தல்.
(3 புள்ளிகள்)

2\. கலை, கைவினை என்பதனை வேறுபடுத்தி விளக்கி இருப்பதுடன் 3 வேறுபாடுகளாவது எழுதி இருத்தல்.

உ + ம் :- மீள் படைப்பு
மொழிக்குரிய தொடர்பாடல்
அகபுற வடிவங்கள் (6 புள்ளிகள்)

3\.
- நாடகக்கலை பற்றி விளக்கி இருத்தல்.
- இலக்கியத்திற்கும் நாடகத்துக்குமான வேறுபாடுகள் (குறைந்து 3 வேறுபாடுகள்)
  உ + ம் - நாடகம் பார்ப்பதனால் உணரப்படுவது.
  இலக்கியம் வாசிப்பதனால் உணரப்படுவது.
- இசைக்கும் நாடகத்துக்குமான வேறுபாடுகள்.
  உ + ம் - நாடகம் பார்த்தலுக்கும் கேட்டலுக்குமுரியது.
  இசை கேட்டலுக்குரியது. (6 புள்ளிகள்)

02\. 1. நடிப்பு என்றால் என்ன என்பதற்கான விளக்கம்.
யதார்த்தம் / மோடி நடிப்பு பற்றிய சிந்தனை
அல்லது உள்வாரி / வெளிவாரி நடிப்பு பற்றி வேறுபடுத்தி இனங்காட்டி இருப்பதுடன், அச்சிந்தனைகளோடு தொடர்புடைய அரங்கவியலாளரின் சிந்தனைகளை உதாரணமாக குறிப்பிட்டிருத்தல்.

உ + ம் - யதார்த்தம் - ஸ்ரனிஸ்வஸ்கி
மோடி - பிரக்ட் (5 புள்ளிகள்)

agaram.lk

2. பிரபல்யமான நடிகர் ஒருவரைப் பற்றியும், அவரது நடிப்புச் சிறப்புப் பற்றியும் விபரித்திருத்தல் உதாரணமாக, நடிகமணி வைரமுத்து பிரான்சிஸ் ஜெனம் …
அல்லது ஸ்ரனிஸ்லவஸ்கியின் 'முறைமை' கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு சிந்தனைகளை முன்வைத்திருத்தல். (5 புள்ளிகள்)

3. வினா II இல் குறிப்பிட்டிருந்த ஆளுமைகள் பற்றிய தமது சொந்த அபிப்பிராயங்களை முன்வைத்திருத்தல். (5 புள்ளிகள்)

03. வெளிகள் ஒவ்வொன்றினதும் இயல்புகள் விபரிக்கப்பட்டிருத்தல்.
உதாரணமாக :- குளோப் அரங்கின் வெளி, 3 தளங்களைக் கொண்டிருக்கும், பார்ப்போர் எண்கோண வடிவ அரங்கில் தளங்களுக்கு ஏற்ப அமைந்திருப்பர்.

அளிக்கை முறையை வெளிப்படுத்தியிருத்தல்.
உதாரணமாக :- படச்சட்ட அரங்கில், பார்ப்போர் ஒரு பக்கமாக அமர்ந்திருப்பர் - அளிக்கையும் ஒருபக்கமாக அமையும். மூன்று பக்கமும் அடைக்கப்பட்ட வெளியாக இருப்பதால், வெளி ஆர்வத்தை தூண்டும்.

பார்ப்போர் ஆற்றுவோர் உறவு
உதாரணமாக தெருவெளி அரங்கில் ஆற்றுவோருக்கு பார்ப்போர் மிக நெருங்கி இருப்பர், உணர்வுகளை முகமுகமாக தரிசிப்பர், எதிர்வினைகள் வேகமாக செயலாற்றும் ஆற்றுவோர் பார்ப்போர் உறவு மிக நெருக்கமாக இருக்கும்.

மேற்கூறப்பட்டவாறு மூன்று அரங்க வெளிகளையும் ஆராய்ந்திருக்க வேண்டும்.
(3 x 5 = 15 புள்ளிகள்)

04. 1. அரங்கில் பார்ப்போரின் முக்கியத்துவம்
அவர்களின் பங்களிப்பு
அவர்களின் வகைமை
பார்ப்போரின் திருப்தி போன்றவற்றை ஆராய்ந்திருத்தல். (5 புள்ளிகள்)

2. பரதர் கூறும் ரஸம் பற்றிய கோட்பாடு.
விபாவ – அனுபவ – வியவிச்சாரியபாவ வழி தோன்றுதல்.
வகைகள்
அவை பார்ப்போரில் தோற்றுவிக்கும் ரஸபானுபவம் என்பவற்றை எழுதியிருத்தல்.
(5 புள்ளிகள்)

3. கிரேக்க ரஜடியின் அறிமுகம்.
'கதாசிஸ்' என்பதன் விளக்கம்
அதன் தோற்றதுக்கு காணமான 'ஹமாசியா'
'கதாசிஸ்' பார்ப்போரில் தோற்றுவிக்கப்படுகின்றமை போன்ற வகையில் விளக்கம் அமைந்திருத்தல். (15 புள்ளிகள்)

05.
- நாடகம் கூடுக்கலை என்பது.
- அதில் பலகலைகள் சங்கமித்தல் (இலக்கியம், நடிப்பு, காட்சி, இசை, ….)
- கூட்டுக் கலையாக இருப்பினும் அது தனிக்கலையாக மிளிர்வது பல கலைகளும் எவ்வாறு தமது தனித்தன்மைகளை இழந்து நாடகமென்ற கலையை படைக்கின்றன.
- பல கலைஞர்கள் ஒரு கணத்தில் ஒன்றிணைக்கின்றமை.
- இவை அனைத்தும் இணைந்த நாடக கலையின் சிறப்பு என்பவற்றை உள்ளடக்கி கட்டுரையாக எழுதி இருத்தல். (15 புள்ளிகள்)

06. சிறு குறிப்புக்கள்
- குறிப்பிட்ட விடயம் பற்றிய எண்ணக்கரு
- அதன் அரங்குகள் முக்கியத்துவம்.
- அதனுடன் தொடர்புபடுகின்ற விடயங்கள்.
- அது பற்றிய மாணவரின் அபிப்பிராயம்

என்பன உள்ளடங்கி இருத்தல். (3 x5=5 புள்ளிகள்)

agaram.lk